# BENEVOLENT IAS ACADEMY

1626A, Sri Vinayaga Complex, Avinashi Road, Hope College,
Peelamedu (PO), Coimbatore – 641004.
Cell: +91-9787731607/9787701067.
Web: www.benevolentacademy.com E-Mail:benevolentacademy@gmail.com


# DAILY IMPORTANT CURRENT AFFAIRS

## TNPSC Group I, II/IIA & IV

DATE: 07.05.2025

### 1) இந்தியா - பிரிட்டன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு இடையே வர்த்தக மற்றும் சமூக பாதுகாப்பு ஒப்பந்தம் இடப்பட்டுள்ளது.
- ஒரே வருமானத்தின் மீது இரு நாடுகளிலும் விதிக்கப்படும் வரிக்கு விலக்கு அளிக்கும் ஒப்பந்தமே இந்த சமூக பாதுகாப்பு ஒப்பந்தமாகும்.
- இந்தியாவின் 99% பொருட்களுக்கு வரி விலக்கு இதன் மூலம் அளிக்கப்படும்.

**குறிப்பு:** உலகின் மிகப் பெரும் பொருளாதார நாடுகளின் பட்டியலில் இந்தியா ஐந்தாம் இடமும், பிரிட்டன் ஆறாம் இடமும் வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### 2) உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி

- **உச்சநீதிமன்றத்தின் 52 வதுபுதிய தலைமை நீதிபதியாக பிஆர் கவாய்** மே 14 இல் பதவி ஏற்கிறார்.
- இவரை அடுத்த தலைமை நீதிபதியாக சூரியகாந்த் பதவி ஏற்பார்.
- இதுவரை உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதி உட்பட மொத்தம் 34 நீதிபதிகள் உள்ளனர்.




3) சூப்பர்பெட் கிளாசிக் செஸ் **ருமேனியா**வில் தொடங்கியது.

### 4) சாலை விபத்தில் சிக்குபவர்களுக்கு கட்டணம் இல்லா சிகிச்சை 2025

- சாலை விபத்தில் சிக்குபவர்களுக்கு கட்டணம் இல்லா சிகிச்சை என்று நமது **மத்திய அரசு** நாடு முழுவதுமான ஒரு சிகிச்சை திட்டத்தை அறிவித்துள்ளது.

- இந்த திட்டத்தில் காவல்துறை, மருத்துவமனைகள் மற்றும் மாநில சுகாதார முகமைகளுடன் இணைந்து தேசிய சுகாதார ஆணையமும் செயல்படும்.
- இதனை கண்காணிக்க 11 பேர் கொண்ட வழிகாட்டுதல் குழு ஒன்றும் அமைக்கப்படும்.
- விபத்தில் பாதிக்கப்படுபவர்கள் **7 நாட்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் ரூபாய் 1.5 லட்சம் மதிப்பிலான கட்டணமில்லா சிகிச்சையை** இந்தத் திட்டத்தின் மூலம் பெற முடியும்.

### தமிழ்நாடு விபத்து இலவச சிகிச்சை திட்டம்




**இன்னுயிர் காப்போம் - நம்மை காக்கும் 48** என்ற திட்டத்தின் கீழ் விபத்து இலவச சிகிச்சை திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் **2021 டிசம்பர் 18** இல் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தில் தமிழகத்தை சேர்ந்தவர் மட்டுமல்லாமல் வேறு மாநிலத்தவர் மற்றும் வெளிநாட்டினரும் பயன்பெற முடியும்.

5) **ஐநா மனித வளர்ச்சி குறியீடு (Human Development Index)**

ஐநா மனித வளர்ச்சி குறியீட்டில் 193 நாடுகளை உள்ளடக்கிய தர வரிசையில் இந்தியா 130 வது இடத்தை பெற்றுள்ளது.

### மனித வளர்ச்சி குறியீடு எந்த காரணிகள் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகிறது?

- நீண்ட நாள் ஆரோக்கிய வாழ்வு
- கல்வி பெறும் நிலை
- வாழ்க்கைத்தரம்

  - ✓ இந்தியா **மனித வளர்ச்சி குறியீட்டு மதிப்பில் 0.685 புள்ளி**களையும், மனித **சராசரி ஆயுட்காலம் 72 ஆண்டு**களையும் கொண்டுள்ளது.
  - ✓ சராசரி பள்ளி படிப்பு காலம் 12.95 ஆண்டுகள்
  - ✓ தேசிய தனிநபர் வருமானம் 9,046.76 (2023 ஆம் ஆண்டு)

6) **ஜெர்மனியின் புதிய பிரதமராக ஃப்ரீட்ரிக் மேர்ஸ்** பதவி ஏற்கிறார்.

7) **ஆசிய குதிரை ஏற்ற சம்மேளன சர்வதேச ஷோ ஜம்பிங் போட்டி**

- ஈரான் தலைநகர் டெக்ரானில் நடைபெற்றது.
- சென்னை வீரர் சூர்யா ஆதித்யா இதில் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார்.

**8) சிங்கப்பூர் பொதுத் தேர்தல்**

- சிங்கப்பூர் தேர்தலில் மக்கள் செயல் கட்சி வெற்றி பெற்று 60 ஆண்டுகளாக ஆட்சியில் நீடிக்கிறது.
- சிங்கப்பூர் 1965இல் மலேசியாவின் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்ற நாடு ஆகும்.
- இது 60 லட்சம் மக்கள் தொகையை கொண்ட தீவு ஆகும்